# இறையியல்
# கோலங்கள்

வடிவம்: 6 வண்ணம்: 2



ஜூன் 1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

காலாண்டு வெளியீடு

# IRAI - IYAL KOLANGAL

**Tamil Theological Quarterly**


| வடிவம்: 6 | ஜூன் 1990 | வண்ணம்: 2 |
|---|---|---|


வெளியிடுவோர்


புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
இலங்கை.


(தனிப்பட்ட விநியோகத்திற்கு மட்டும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் குழு

ஆசிரியர்:

அருள்திரு. எஸ். ஜே. இம்மானுவல்

துணை ஆசிரியர்கள்:

அருள்திரு. ஜே. நீக்கிலஸ்

அருட்திரு. ஜெறாட் சவரிமுத்து

விநியோகம்:

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.

Published by:

St. Francis Xavier's Seminary
Columbuthurai, Jaffna
Sri - Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

குருக்கள் தொகையில் குறைந்தாலும் வகையில் முக்கியம் வாய்ந்தவர்களாய் இருக்க வேண்டுமென்பது திருச்சபையினதும் உலகத்தினதும் எதிர்பார்ப்பு. இவர்களின் வகை, தராதரம், சாரம், ஆர்வம், வீரம், விவேகம் குறைந்து போனால் அல்லது மங்கிப் போனால் அது முழுத் திருச்சபையின் வாழ்விற்கும் பாதகமாகும், சேதம் விளைவிக்கும். ஆகையினால் திருச்சபை விழிப் புணர்ச்சியுடன் தனது குருக்களின் வகைகுன்றாது அவர்கள் வாழ்வில் வேண்டிய மாற்றங்களையும், மறுமலர்ச்சியையும், சீர்திருத்தங்களையும் ஊக்குவிக்கவேண்டும்.

மாறிவரும் உலகின் தேவைகளுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுக்கவல்ல குருக்களை உருவாக்க வேண்டுமென்ற ஆர்வத்தினால் திருச்சபை "இன்றைய சூழ்நிலையில் குருக்களை உருவாக்குதல்" என்ற தலைப்பில் ஓர் ஆயர்பேரவையைக் (றோமை 28/9 - 28/10) கூட்டுகின்றது. இக்கூட்டத்தை மையமாக வைத்து எம்மத்தியிலும் குருக்களின் சாரமும் வீரமும் வளர அவர்கள் பற்றிய ஆரம்பம், சரித்திரவளர்ச்சி, ஆன்மீகம் எதிர்பார்ப்புகள் முதலியவற்றை இறை இயல் வடிவத்தில் அளிக்கின்றோம்.

குருக்கள் இறைமக்கள் மடியில் தோன்றி இறைமக்களின் ஆதரவுடனும் ஊக்கத்துடனும் வளர்ந்து இறைமக்களுக்காகப் பணி செய்து தமது முதிர்ச்சியையும் முழுமையையும் அடைய இறைமக்களின் உணர்வும் ஆர்வமும் வளருவதாக.

வேரின்றி மரமில்லை, குருகுலமின்றிக் குருவில்லை

எஸ் ஜே. இம்மானுவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே


பக்கம்

1. குருத்துவ உருவாக்கமும்
பொது நிலையினரின் எதிர்பார்ப்பும்
*ஆர். யோசேப்* 5

2. குருத்துவமும் உருவாக்கலும்
*அருட்திரு எஸ். ஜே இம்மானுவல்* 11

3. திருச்சபைச் சட்டத்தின் நோக்கில்
திருப்பணியாளரின் ஞானவாழ்வு உருவாக்கம்
*அருட்திரு இராயப்பு யோசப்* 17

4. குருத்துவத்தின் பரிணாம வளர்ச்சி
*சகோ. அருள் யாவிஸ்* 19

5. மறை மாவட்டக் குருக்களின் ஞானநெறி
*தவத்திரு. லோ. வ இராயப்பு. மா. மதி* 23

6. பொது நிலையினருக்கான
இறையியல் கல்வி ஆரம்பம் 28

7. SYNOPSIS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருத்துவ உருவாக்கமும் பொது நிலையினரின் எதிர்பார்ப்பும்

ஆர். யோசேப்
முன்னாள் விரிவுரையாளர்,
பலாலி ஆசிரிய கலாசாலை.

## பிள்ளையின் உரிமை

தாம் பெற்ற பிள்ளைகளை உருவாக்கம் செய்பவர்கள் பெற்றோர். ஆனால் தம் தாய் தந்தைகள் எத்தகைய பண்புள்ளவர்களாக அமைய வேண்டும் என்ற எண்ணத்தைக் கொள்ளும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு. இதே போல் தங்களை வழிநடத்தும் குருக்களுக்கு இருக்க வேண்டிய குணநலன் பயிற்சி பற்றி பொதுநிலையினர் சில எதிர்பார்ப்புக்களை கொண்டிருத்தல் சரியானதே.

## பயிற்சியின் முக்கியம்

திரிதெந்தின் சங்கத்திற்கு முன்னர் குருக்கள் பயிற்சி பற்றி அதிகம் கவனம் செலுத்தாமையால் ஏற்பட்ட சீர்கேடுகள் மீண்டும் இன்று இடம் பெறுவதை எவருமே விரும்பமாட்டார்கள். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் குருத்துவப் பயிற்சி பற்றிய தீர்மானத் தொகுப்பிற் கூறப்பட்டவை நடைமுறைப் படுத்தப்படும் காலத்தில் நாம் வாழ்கின்றோம். கிறிஸ்தவ வாழ்வின் வளமும், திருச்சபையின் மறுமலர்ச்சியும் பெரும் பாலும் குருக்களிலேயே தங்கி உள்ளது. எனவே இந்நோக்கை நிறைவேற்றக் கூடிய குருக்கள் உருவாக வேண்டுமென கிறிஸ்தவர்கள் விழைகின்றனர்.

## அழைத்தலின் தொட்டில்கள்

குருத்துவ உருவாக்கம் அதி புனிதமானது. இது தொடங்கும் இடம் குடும்பம் என்பதை நாம் மறந்து விடுகிறோம். குருத்துவ அழைத்தலைப் பேணி வளர்த்தல் கிறிஸ்தவ சமுதாயத்தின் கடமையாகும். குடும்பமும், பங்கும் குருத்துவ அழைத்தலின் தொட்டில் எனக் கூறலாம் இறைவன் பலரை அழைத்தவண்ணம் இருக்கின்றார். ஆனால் இக்குரல் நம் காதுகளில் சிறப்பாக கூறின் உள்ளத்தில் சென்றடையப் பல விடயங்கள் தடைக்கற்களாக அமைகின்றன. தம்மிடம் ஒப்படைக்கப் பட்ட சிறார்கள் இறைவனின் அழைப்புக்குச் செவி படுக்க ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும், கத்தோலிக்க கழகங்களும் வழிசெய்ய வேண்டும். அப்பொழுது, ஆண்டவரே பேசும். அடியேன் கேட்கின்றேன் என்ற பதில் பல கோணங்களில் இருந்து கேட்கும்.

## பங்கில் மலரும் அழைத்தல்கள்

செயற்பாடுள்ளதும் உயிருள்ளதுமான ஒரு பங்குத்தளம் அழைப்பின் சிறந்த தளமாக அமையும். பங்குக் குரவரின் செல்வாக்கு சிறுவர்களை அழைத்தலின்பால் இட்டுச்செல்லும். பீடப்பணியாளர்களாகவோ, பாடகர்களாகவோ, ஏன் கோவில் வளவில் விளையாடுபவர்களாகவோ, சிறுவர் கோவிலைச் சுற்றிவலம் வருவர். பங்குத்தந்தையின் அன்பு, சிறுவர்பால் கொண்டுள்ள ஈடுபாடு, அவரது ஆன்மீக ஆளுமை, அணுகுமுறை என்பன பல சிறுவர்களை அழைப்பின்பால் இட்டுச் செல்லும் காரணிகளாக அமையும். மறுதலையாக இறை அழைப்பை ஏற்கத் தயக்கத்தையும், அதன்பால் வெறுப்பையும் கூட உண்டாக்கலாம்.

## அடிப்படைக் குழுக்களில் அழைத்தல்

மானிடவியலிலும் அறிவியலிலும் ஓரளவு தேர்ச்சி பெற்றவர்களை குருத்துவக் கல்லூரியில் பயிற்றி அவர்களைக் குருவாக்கும் முறையே இன்றுள்ளது. சிறிய குருத்துவக் கல்லூரிகளும் தொடக்க பயிற்சிக் களங்களாக அமைகின்றன. ஆதித்திருச்சபையின் வாழ்வில் அமைந்திருந்த சகோதரத்துவத்துடன் கூடிய குழுக்கள் போன்ற அமைப்புக்கள் நம் பங்குகளில் உருவாகாதது பெருங் குறையாகும். அடிப்படைக் கிறிஸ்தவக் குழுக்கள், அருங்கொடை அடிப்படையில் அமைந்த சகோதரக் குழுக்கள் பல செயற்பாட்டுடன் இயங்கும் காலம் எப்போது தான் வருமோ?

## நிபந்தனைகளை மாற்றுக

தலைமைப் பண்பும், அர்ப்பணமும், திருப்பணியில் ஆர்வமும் உள்ள பலர் இக்குழுக்களில் இருந்து தோன்ற வழி பிறக்கலாம். ஓரளவுக்கு இவர்கள் குருத்துவம் எதிர்பார்க்கும் பணிகளில் ஈடுபடுவார்கள். குருத்துவப் பணிக்கான உருவாக்கலுக்கு ஆர்வமும், அர்ப்பணமும் நிறைந்த இத்தலைவர்கள் பொருத்தமானவர்களே. குருத்துவக் கல்லூரிகள், மற்றைய நிபந்தனைகள் ஏற்புடைத்தாக இருந்தால் இத்தகைய தலைவர்களையும் குருக்களாக உருவாக்கத் தயக்கம் காட்டக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமைப்பணியில் தோய்ந்தவர் பயிற்றப்பட வேண்டும்

இன்றைய அமைப்பின் கீழ் திருத்தொண்டராக அவர்களும் மேய்ப்புப் பணிகளில் ஈடுபட்டு அனுபவம் பெறுகின்றனர் குழுக்களின் தலைவர்கள் இத்தகைய அனுபவத்தை ஏலவே பெற்றிருப்பர். ஆதலின் அவர்களை குருமடத்தில் சேர்த்து பயிற்சி அளிப்பது இலகுவாக இருக்கும். காலங் கடந்து ஆனால் வாழ்வில் மேய்ப்புபணி தொடர்பாக அனுபவம் பெற்றவர்கள் குருத்துவப்பணியில் நாட்டங் கொள்ளும் போது அடிப்படையான தீவிர பயிற்சியின் பின் முழுமையான குருக்களாகவோ, அல்லது, சில திருப்பணிகள் செய்பவர் ளாகவோ அவர்களை ஆக்கலாம். வழி வழி வந்த நடைமுறைகள் சட்டங்கள். மாற்றத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும். மாற்ற வேண்டும் என்பதற்காக அல்ல திருச்சபையில் பொது நன்மையின் பொருட்டு பணியில் ஊக்கமுள்ளவர்களை இனங்காண முனைய வேண்டும்

## வல்லுநர்களும் மேய்ப்பர்களாக வேண்டும்

குருத்துவம் மேய்ப்பு பணியை அடிநாதமாகக் கொண்டு அமைய வேண்டும். வல்லுநர்களாக தனித்துறையில் பயிற்சி பெற்ற பல குருக்களும் இன்று தேவைப்படுகின்றனர். இவர்கள் பெறும் வல்லுநர் பயிற்சி மேய்ப்புப் பணியை இரண்டாம் தரத்திற்கு தள்ளும் போக்கை ஏற்க முடியாது மேய்ப்புப்பணி எங்கள் துறையல்ல என்று கூறும் அளவுக்கு வல்லுனர் சிலர் செயற்படுவதையும் காண்கிறோம். இவர்கள் சுவாமி ஞானப்பிரகாசரிடம் இருந்து படிக்க வேண்டிய பாடங்கள் பல. முதலில் அவர் சிறந்த மேய்ப்பராக விளங்கினார். மறை அறிவிப்புப் பணியிலும், பல பங்குகளைக் கட்டி எழுப்பி அவற்றை வழிநடத்துதலிலும் சிறந்த குருவாக விளங்கினார். அதே வேளையில் தமிழ மொழிக்காகவும் அதன் ஆய்வுக்காகவும் அவர் ஆற்றிய பணிகள் அளப்பரியன. வல்லுநர்கள் அவரிடம் இருந்து பாடங் கற்பார்களாக.

## பிரிவின்றி சேவைசெய்ய

குருத்துவ உருவாக்கலில் குருக்களுக்கிடையில் சகோதரத்துவம் (பிற குருக்களுடனும், மற்றோருடனும் ஒன்றித்து செயற்படுதல் முக்கிய இடம் வகிக்கின்றது) அனைத்தும் கடவுளின் மகிமைக்காகவே என்ற நோக்கு இருந்தால் தன் பெயருக்காக உழைக்கும் போக்கும் மற்றைய குருக்களுடனும், அமைப்புகளுடன் மோதும் துர் அதிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையும் மறைந்துவிடும். பல்வேறு திருப்பணிகள் கிறிஸ்துவின் முழுமைக்காகவே என்ற நோக்கு அமையாவிடத்து இவை ஒரே திருச்சபை என்ற பாங்கை சிதைத்து பல பிளவுகளுக்கும் வழி வகுக்கலாம்.

## பணியைப் பங்கிட்டு செய்வோம்

குரு மேய்ப்பனாக இருக்கும் அதே வேளையில் கிறிஸ்துவின் அதி சிறந்த பணியாளனாகவும் இருக்க வேண்டியவர். கிறிஸ்துவின் அன்புச் சீடராகவும், அர்ப்பணம் நிறைந்தவராகவும், செல்வாக்கு விளைவிப்பவராகவும், குழுக்களுடன் ஒன்றிணைந்து செயற்படுபவராகவும் இலக்கை நோக்கி வழி நடத்துபவராகவும், நன்மையின் பால் விருப்புள்ளவராகவும் இருக்க வேண்டும். அனைத்தையும் தானே செய்ய வேண்டும் என்ற நோக்கு குருவுக்கு இருக்கக் கூடாது. தாழ்ந்தோர் செய்வதில் உயர்ந்தோர் தலையிடாதிருக்கும் பண்பு குருக்களுக்கு அவசியம். கடந்த காலத்தில் அனைத்துக்கும் குருவையே நம்பி வாழும் ஒரு 'மந்தைப் போக்கை'' பொதுநிலையினரில் திருச்சபை வளர்த்து விட்டது.

## குரு ஒரு தனிப்பட்ட வல்லுநர் அல்ல

இன்றைய பங்குகளின் நிலை கடந்தகால நிலையிலும் மாறுபட்டது. எல்லாம் தெரிந்தவர் எங்கள் சுவாமி என அன்று நம்பினர். கட்டிட அமைப்போ, கல்வியோ, மற்றும் எந்த அலுவலோ எல்லாம் குருவின் ஆலோசனையில் நடந்தன. ஆனால் இன்று இத் துறையில் வல்லுநராக உள்ள பலரை பங்குகளில் காண்கின்றோம். அவர்களின் அறிவுரைகளையும், வழிகாட்டுதலையும் பங்குக் குரவர் பெற்றுச் செயற்பட வேண்டும்.

## குருக்கள் தொடர்ந்து பயிற்சி பெறவேண்டும்

குருத்துவக் கல்வி திருப்பட்டம் பெறுவதுடன் நின்றுவிடுவதில்லை. காலத்திற்கு காலம் ஒன்றுகூடி கருத்தரங்கம் உரையாடல் வழியாக காலத்தோடு ஒட்டிய கருத்துக்களை அறிந்தவர்களாய் மேலும் மேலும் முதிர்ச்சி அடைய வேண்டும். தியானங்களில் ஒன்று கூடுகை அவர்களது அர்ப்பணத்தையும் ஈடுபாட்டையும் வளர்க்கும். குருக்கள் மட்டுமன்றி முதிர்ச்சியடைந்த பொது நிலையினரும் கூட தியான வழிகாட்டிகளாகச் செயல்பட வழிவகுக்கலாம்.

## வார்த்தையால் மட்டுமல்ல வாழ்வால் மக்களை ஈர்க்க

நாங்கள் கீழைத்தேய பண்பாட்டில் வாழ்பவர்கள். குரு பக்தி எங்கள் மக்களிடத்தில் தாராளமாக இருக்கிறது. உண்மையான குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க ஏற்கக்கூடிய, ஞானமும், முதிர்ச்சியும் அர்ப்பணமும் உள்ள பல குருக்கள் குருத்துவக் கல்லூரிகளிலும் பங்குகளிலும் தோன்ற வேண்டும். இத்தகையோர் குருத்துவக்கல்வி பெறுவோரிடத்தும் பொது நிலையின ரிடத்தும் செயற்பாடுள்ள செல்வாக்கை ஏற்படுத்த முடியும். அறிவை யும், ஞானத்தையும் வழங்கும் கருவிகளாக மட்டுமல்ல, தமது வாழ் வால் மனித உள்ளங்களில் செல்வாக்கு விளைவிக்கும், அவர்களைத் தம்பால் ஈர்த்து கிறிஸ்துவின் வழியில் வழி நடத்தும் பெரும் குருக்கள் உருவாகும் நாளை எதிர்பார்ப்போம்.

## வார்த்தையில் என்றும் ஆர்வம் வளர்க்கும் குரு

இறைவார்த்தையில் உள்ள ஆர்வம் அக்கினியாக பல பொதுமக்க ளிடத்தில் எரிந்துகொண்டிருப்பதை இன்று காண்கின்றோம். இதற் காக இறைவனுக்கு நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளோம். வார்த்தை யைப் போதிக்கும் குருவானவர் அதை உள்ளத்தில் ஆழமாகப் பதித்து, உயிரளிக்கும் ஆவியால் புத்துயிர் பெற்று குரவரின் உதடுகளில் இடம் பெறும், கேட்போரின் காதுகளை அடையும்போதுதான் உண்மையான தும், நம்பக்கூடியதுமாக அமையும். வார்த்தையின்பால் உள்ள ஆர் வத்தை குருக்கள் வளர்க்க வேண்டும். குருத்துவக் கல்லூரியில் தொடங் கும் குருப்பணி மென்மேலும் சிறப்பாக அமையத்தக்கதான உருவாக கத்தை குருத்துவக் கல்லூரி ஊக்குவிக்க வேண்டும்.

## குருக்களின் ஒற்றுமை வளர்க

''அவர் எல்லாரும் ஒன்றாக இருக்கும்படி'' வேண்டிய கிறிஸ்துவின் முன் மாதிரிகையைப் பின்பற்றி குருக்கள் ஒரே மனப்பட்டவர்களாய் இருக்க வேண்டியவர்கள் மேய்ப்புப் பணியின் பொருட்டு சிதறி வாழ்ந்தாலும் இடையிடையே சகோதரத்துவத்துடன் ஒன்று கூடி செபிப்பதிலும், நட்பு றவுடன் இரண்டொரு நாட்கள் உறவாடுவதிலும் கழித்தல் விரும்பத் தக்கது. தங்கள் மனச்சுமைகள் நீங்க இத்தகைய ஒன்று கூடல்கள் வழிவகுக்கும்.

## காலத்திற்கேற்ப பாடத்திட்டம் உருவாக்கலில் பொதுநிலையினரின் பங்கு

குருத்துவக் கல்லூரிகளில் பாடத்திட்டம், செயலதிட்டம் என்பன காலத்திற்கு காலம் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். ஆர்வமும் அறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் உள்ள பொது நிலையினரும் இத்தகைய மீளாய்வுகளில் பங்கு கொள்ள வைத்தல் இன்றி அமையாதது. இப்பரிந்துரைகளை செயல் படுத்துவதிலும் தயக்கம் காட்டாது கடந்த கால அனுபவங்கள் கற் பிக்கும் பாடங்களை கற்கவும் முனைய வேண்டும்.

## வழிபாட்டில் பொது நிலையினர்

இறைமக்கள் வழிபடும் மக்களாவர். திருவழிபாடுகளை பொருள் உள்ளனவாக மாற்றி அமைக்க குரவரின் முயற்சி தேவை. வழிபாடுகள் வெற்று மாந்திரீகம் போனறதாக விளங்குவதை தடுக்க வேண்டும். இதற்காக பொது நிலையினர் கருத்துடன் ஈடுபாடு கொள்ளும் விதத் தில் குரு - பொது நிலையினரின் ஒன்றிணைந்த முயற்சியாக வழிபாடு கள் அமைதல் சிறந்தது.

## உறவை வளர்க்கும் குருக்கள்

மக்களுடன் அன்புடன் உறவாடும் பண்பு தொடக்க காலத்தில் இருந்தே குருத்துவக் கல்லூரிகளில் பேணி வளர்க்கப்பட வேண்டும். பிறகாத தேடிப போகவும அவர்களது பிரச்சனைகளில் ஈடுபாடு கொள்ளவும் வேண்டிய தேவை குரவர்க்குண்டு. நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக திருச்சபையில் இருந்து நீக்கி வைக்கப்பட்ட ஒருவரின் சிக்கலை தீர்தது உளமாற்றம் பெறச் செய்து உறவாககிய ஒரு குருவின் முயற்ச் சியை அறிந்தேன். காணாமல் போனதை தேடும் குரவர்கள் எம் மத்தி யில் உருவாக வேண்டும்.

## உண்மையைத் தேடும் குருக்கள்

பிற மறைகளுடனும் பிரிந்துபோன சகோதரர்களுடனும் உரை யாடலும், உணமை அறியும் ஆவலும், உண்மையை நோக்கி பயணஞ் செய்யும் பண்பும் உடைய குரவர்கள் உருவாக வேண்டும் பிறரிடம் இருநது தனனை அந்நியப்படுத்தாது பிறர்பால் உளள அன்பினால் ஈடுபாடு கொள்ளும் குருக்கள் பலர் இன்றைகுத் தேவை.

குருக்கள் தொகை பலுகட்டும். அவர்தம் உருவாக்கம் சிறக்கட்டும் அவாகள் பணி ஓங்கட்டும.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருத்துவமும் உருவாக்கலும்

— அருள்திரு எஸ். ஜே. இம்மானுவேல்

## 1. 1990 ஆயர் பேரவை

1990 ம் ஆண்டு செப்டம்பர் 28 தொடக்கம் ஒக்டோபர் 28 வரை றோமையில் உலக ஆயர் பேரவை நடைபெறும். இப்பேரவையின் மையப் பொருள் "இன்றைய சூழ்நிலையில் குருக்களை உருவாக்குதல்". இப்பெரும் சம்பவத்திற்கான ஆயத்தங்கள் உலக திருச்சபையின் பலவேறு மட்டங்களிலே நடைபெறுகின்றன. விசேடமாக ஆயர் அவைகளுக்கென நியமிக்கப்பட்ட இலாகாவின் தலைமையில் பல ஆயர் குழுக்களும் இறைவல்லுனர் குழுக்களும் இயங்கி வருகின்றன.

## 2. சிந்தனைக்கு சந்தர்ப்பம்

இச்சம்பவத்தில் சுமார் 300 ஆயர்கள் மட்டுமே நேரடியாக பங்கெடுப்பர். இருந்தும் இதற்குச் செய்யப்படும் ஆயத்தங்களில் எல்லாத் தலத்திருச்சபைகளும், ஆங்காங்கு இயங்கும் குருத்துவ கூட்டங்களும், குருத்துவ கல்லூரிகளும் பங்கெடுக்க அழைக்கப்பட்டிருக்கின்றன. ஆயர் பேரவை முழுத் திருச்சபையின் விருப்பு வெறுப்புக்களைக் கவனத்திற்கு எடுத்து, சில முக்கிய வழிமுறைகளை தர இருக்கிறது. மக்களும், விசேடமாக குருத்துவக் கல்லூரிகளும இவைகளை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். ஆனால் அதன் மையப்பொருள் சில நாட்களில் கூட்டங்களிலோ சில முடிவு அறிவுரைகளிலோ முற்றும் முடிவு பெறமுடியாது. ஆனால் இவ் ஆயர்பேரவை இறைமக்கள் மத்தியிலே குருத்துவத்தைப் பற்றியும், அவர்களின் பணியைப் பற்றியும், உருவாக்கலைப் பற்றியும், அவர்களின் வளர்ச்சிக்குப் பொருத்தமாக இறைமக்கள் கொண்டிருக்க வேண்டிய மனப்பான்மையையும் பெருக்கி வளர்க்கும் ஓர் சந்தர்ப்பமையமாக அமைகின்றது.

## 3. உருவத்தை நோக்கி உருவாக்குதல்

ஒரு பொருளை சரியாகவும் திறனாகவும் உருவாக்குவதற்கு அப்பொருளின் தன்மையையும் உருவத்தையும், நோக்கத்தையும் பொருத்தத்தையும் ஆராய்ந்து அறிய வேண்டியது அப்பொருளின் கரிசனையுடைய அனைவரினதும் தலைக்கடனும தவிர்க்க முடியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்புமாகும். எவ்வளவிற்குத்தான் குருத்துவத்தின் உருவம் தெளிவுபடுத்தப்படுகிறதோ, அவ்வளவிற்குத்தான் அதன் உருவாக்கமும் பொருத்தமான அறிவுரைகளைப் பெறும். உருவத்தைப்பற்றி தெளிவு குறைவாயிருப்பின் உருவாக்க முயற்சிகள் பயன் கொடுக்க முடியாது; பிழையான முடிவையே கொண்டு வரும். ஆகையால் இக்கட்டத்தில் எழும் பொருத்தமான கேள்வி யாதெனில்:-
எமது திருச்சபையில் இருக்கவேண்டிய, செயற்பட வேண்டிய குருத்துவம் யாது? அதன் உருவம் யாது? அதன் பண்புகள் யாது?

## 4. குருத்துவத்தின் அம்சங்கள்

இயேசு ஆரம்பித்த இறை அரசிற்கு ஆயத்தமாக இயங்க வேண்டிய திருச்சபையில், எவ்வித குருக்கள் இயங்க வேண்டுமென்பதை திருவெளிப்பாடும் பாரம்பரியமும் (Scripture and Tradition) தமக்குரிய முறையில் தெரிவிக்கின்றன, இவைகளின் உதவியுடன் கிறிஸ்தவ குருத்துவத்தின் மாறாத சாராம்சங்களையும், (Essential Elements) காலத்துக்குக் காலம் மாறிவரும் உருவ அம்சங்களையும் (Changing aspects) பிரித்தெடுத்து, இன்றைய குருத்துவத்தின் தன்மையையும் பணியையும் இன்றைய திருச்சபை தீர்மானித்து, தனது ஆசிரியத்துவ அதிகாரத்துடன் (Magisterial Authority) எமக்கு கற்பிக்கின்றது. இதைக்கோட்பாட்டியலாகவும் சட்டவியலாகவும் (Dogmatically and Juridically) செய்து வருகின்றது. இவைகளுடன் சேர்த்து, இன்றைய குருக்கள் இன்றைய உலகிற்கு பொருத்தமான சேவை செய்ய வேண்டுமாயின், உலக மெய்மைகளின் தேவைகளையும் சவால்களையும் (needs and challenges of contextual realities) அவதானித்து செயல்படுவது முக்கியம் என 2ம் வத்திக்கான் சங்கம் வற்புறுத்துகிறது.

## 5. உருவமும் உருவாக்கமும் ஒருங்கிணைய

ஆகையினால் நாம் ஒரு குறிக்கப்பட்ட நோக்கிலே மாத்திரம் நின்றுவிடாது விவிலியம், பாரம்பரியம், கோட்பாடு, திருச்சபைச் சட்டம், இவைகள் கூறும் முடிவுகளை, இன்றைய உலக மெய்மைகளின் ஒளியிலும் பொருத்தத்திலும் சேர்த்து, குருத்துவத்தை வியாக்கியானம் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றோம். குருத்துவத்தை பற்றிய கோட்பாடு சட்ட முடிவுகள் ஏனைய அம்சங்களின் தாக்கங்களைக் கொண்டிருக்காவிடின் வெறும் போதனையாகவே இருக்கும். மாறாக சகல அம்சங்களும் ஒன்றாகக் கலந்து செயற்படின், இன்றைய உலகிற்கேற்ற கிறிஸ்தவ குருக்களின் உருவம் மிகத் தெளிவாகும், அதற்குரிய முயற்சிகளும் வலுவடையும், குருத்துவப்பணி பன்மடங்கு பயன் கொடுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. ஊற்றுக்கு திரும்புக

கடந்த 40 ஆண்டுகளாக கத்தோலிக்க விவிலிய வல்லுனர்கள் முன்பொருபொழுதும் இல்லாத சுதந்திரத்துடனும் ஆர்வத்துடனும் விவிலிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். அதேநேரத்தில் திருச்சபையின் ஆசிரியத்துவமும் 'ஊற்றுக்கு திரும்புக' (return to sources) என்று சகல இறையியல் வல்லுனரையும் ஏவியது. இதன் பயனாகக் கிறிஸ்தவ குருத்துவத்தின் தனிப்பெரும் தன்மை விவிலிய ஆராய்ச்சி அடிப்படையில தெளிவாகியது. அதில் படிந்திருந்த சில தப்பான உருவங்களும் களையப்படுகின்றன.

## 7. ஒரு குருத்துவத்தில் பலர் பங்கெடுப்பு

கிறிஸ்தவ குருத்துவம் பழைய ஏற்பாட்டின் பூசாரிக் குருத்துவமல்ல (Sacerdotalism), அல்லது சரித்திரத்தில் உருவெடுத்த அதிகாரக் குருத்துவமுமல்ல (Authoritarianism) அப்பேர்ப்பட்ட குருத்துவத்தை கிறிஸ்து எதிர்த்தார். அதற்கு முற்றுப்புள்ளியிட்டார் தமது வாழ்விலும், தமது தனிப்பெரும் மரண – உயிர்ப்பிலும், திரும்பத் திரும்ப நடாத்தப்படும் பலிகளுக்கும் குருக்களுக்கும் முற்றுப்புள்ளியிட்டு ஓர் நிகரற்ற தனிப்பெரும், மீளவும் உருவெடுக்க முடியாத (unique and irrepeatable) குருத்துவத்தை நிறைவேற்றினார். ஆகையினால் யேசுக்கிறிஸ்துவின் பின் தனித்து நிற்கும் உண்மையான பலியெதுவுமில்லை, குருத்துவமுமில்லை. திருச்சபையில் இன்று நடைபெறும் பலிகளும், இன்று இயங்கும் குருக்களும், அன்று கிறிஸ்துவினால் நிறைவேற்றப்பட்ட பலியையும் குருத்துவத்தையும் திரும்பத்திரும்ப அருட்சாதன வழியாக (Sacramentally) நிறைவேற்றுகின்றன; பிரசன்னப்படுத்துகின்றன. ஆகையினால் இன்றைய குருக்கள் உண்மைக்குருத்துவத்தின பங்கெடுப்பாளராக (Participators) மாறுகின்றனர்.

## 8. குருத்துவத்தின் சாரம்சம்

யேசுக்கிறிஸ்துவின் நிகரற்ற எல்லையற்ற ஒரே குருத்துவத்திலே பங்கெடுக்க அழைக்கப்பட்டவர், எவ்விதம் அக் குருத்துவம் உருவாக்கப்பட்டதோ, அவ்விதத்தில்தான் பங்கெடுப்பவரும் தம்மை திருச்சபையின் குரு என்ற பணிவாழ்விற்கு தகுதிப்படுத்த முடியும் கிறிஸ்து சிலுவை மரத்தில் மாத்திரம், மூன்று மணித்தியாலங்களுக்கு மாத்திரம், குரு உருவெடுத்தவரல்ல பரமதந்தைக்கு கீழ்ப்படிவு நிறைந்த சீடத்துவத்திலும், இறைவார்த்தை ஆர்வத்திலும், நல்லாயன் தலைமைத்துவத்திலும, தமது குருத்துவத்தை வெளிப்படுத்தியவர். பலிசெலுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் இறைமகனாக, இறைப்போதகராக, நல்லாயனாகப் பணிபுரிந்தவர். ஆகையினால் விவிலிய வல்லுனர் றேமன்ட் பிறவுன் (Raymond Brown) கிறிஸ்தவ குருக்களிடத்தில் இருக்க வேண்டிய சாரம்சத்தை, நாலு வார்த்தைகளில் உரிய வரிசையில் வருணிக்கின்றார்.

1. சீடத்துவம் (Discipleship)

2. அப்போஸ்தல ஆர்வம் (Apostolic zeal)

3. நல்ல மேய்ப்பனின் தலைமைத்துவம் (Good – Shepherd – leadership)

4. திருப்பலி விருந்தின் தலைமைத்துவம் (Eucharistic President)

9.0 திருச்சபையின் ஆசிரியத்துவத்தினால் பல்வேறு வார்த்தைகளில் வர்ணிக்கும் குணாதிசயங்களை இந்நான்கு வார்த்தைகள் முழுத்தம் திருத்தமாகவும் இலேசாகவும் விளங்கக் கூடியவகையில் விளக்குகின்றன. ஆகையினால் இவ் அம்சங்களை மையமாக வைத்து குருத்துவமும் அதன் உருவாக்குதலும் எத்திசை வரை வேண்டுமென்பதை நோக்குவோம்.

9.1 திருமுழுக்கில் ஆரம்பிக்கப்பட்ட சீடத்துவம் குருத்துவத்தில் ஆளப்படுத்தப்படுகிறது. அழைத்தலினாலும் அர்ப்பணிப்பினாலும் உருவாகப்பட்ட நெருங்கிய உறவு திருநிலைப்படுத்தலினால முத்திரையிடப்படுகின்றது கிறிஸ்துவிற்கும் குருவிற்குமிடையிலே புதியதொரு உடன்படிக்கை ஒப்பந்தம் ஏற்படுகின்றது. நீ என்னைத் தெரியவில்லை நான் உன்னைத் தேர்ந்து கொண்டேன் என்றும், நீ எனது நண்பன் என்றும் நினைவூட்டப்படுகின்றது கிறிஸ்துவின் குருத்துவத்தில் பங்கெடுக்க முன்வருபவன் அவருடைய நெருங்கிய சீடனாகவும் நண்பனாகவும் தன்னை உருவாக்க வேண்டும், ஆகையால் ஒரு குருமாணவனதும், ஓர் குருவினதும் ஆன்மீக வளர்ச்சி முழுவதும் சீடத்துவத்தையே மையமாகக் கொண்டு வளர வேண்டும் சீடத்துவத்தில் முதிர்ச்சியடைவதே குருவின் இலட்சியமாக அமையவேண்டும்

9.2 இதேவிதமாக கிறிஸ்துவின் செய்தியை ஆர்வத்துடன் வார்த்தையினாலும் வாழ்க்கையினாலும் போதிக்க துடிதுடிக்கும் அப்போஸ்தலனாக (G. R apostolein = commissioned with a message) இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவார்த்தையை. அதன் செய்தியை, மனிதருக்குப் பகிர்ந்து கொடுபதற்கு அவன் எப்போதும் ''பிரசவ வேதனையில்'' (Pregnant with the Word) இருக்க வேண்டும் வார்த்தையில் ஊறி நிறைவு (Saturated) கொண்டவனாய், வார்த்தையினால் பீடிக்கப்பட்டவனாய் ( ossessed with the Word) இருக்க வேண்டும். ஆகையினால் வார்த்தையின் அறிவும் ஞானமும் உருவாக்குதலில் வளர்க்கப்படவேண்டும்.

9.3 இறைமக்களுக்கு உணவூட்டி வளர்க்கவும் நல்வழிகாட்டவும் அழைக்கப்பட்ட குரு கிறிஸ்துவின் தலைமைத்துவ பண்பைக் கொண்டிருக்க வேண்டும், அதிலும் நல்லாயனுக்குரிய (காணாமற்போன ஆடுகளையும் இறையாசுச செல்வங்களையும் கரிசனையோடு தேடும்) தலைமைத்துவ பண்பைப் பெற்றிருக்க வேண்டும். தம்மைத் தேடி வருபவருக்கு மாத்திரமல்ல, வழிதவறி அலைபவர்களுக்கும் தேடிச்சென்று அன்பும் இரக்கமும் காட்டுவதே உண்மைத் தலைமைத்துவம் என யேசு காண்பித்தார். ஆகவே தலைமைத்துவ திறமையும் இரக்கம் நிறைந்த உள்ளமும் குருக்களில் வளர்க்கப்பட வேண்டிய உயர் பண்புகள். இவை இன்றேல் குருக்களாக இயங்க முடியாது.

9.4 முந்திய மூன்று அம்சங்களும் இருந்தால்தான் ஒருவன் யேசுவுடன் ஒன்றித்து, ஒருமைப்பட்டு அவரைப்போல, அவரிலே வாழ்கின்றான். அப்படி வாழ்பவன்தான அவருடைய பலியையும் தலைமை வகிக்கும் பணியையும் அவைக்குரிய பண்பையும் நிறைவேற்றலாம். நெருங்கிய சீடனாகவும், விறுவிறுப்பான அப்போஸ்தலனாகவும், காருண்யம் நிறைந்த நல்லாயனாகவும் இருக்கும் தலைவனேதான் திருப்பலியை நடாத்த தகுதி பெறுகின்றான். திருப்பலி ஒப்புக்கொடுப்பதற்கும் அதில் தலைமை வகிப்பதற்கும குருத்துவ படிப்பும் பட்டமும் போதாது, குருவுக்கு தகுந்த பண்புகளும் இருக்கவேண்டும்.

## 10. படிப்பும் பட்டமும் போதாது பண்புகள் வேண்டும்

குருப்பட்டம் பெற்றதனால் மாத்திரம் திருப்பலி தலைவனென்றும், திருக்கூட்டத்தின் தலைவனென்றும், உண்மை அப்போஸ்தலனென்றும், யேசுவின் நெருங்கிய சீடனென்றும் – இலேசாக சிந்திப்பதும அப்படி முடிவுகட்டுவதும், பெரிய தவறு குருத்துவ உருவதகில் முறையாக அமைய வேண்டிய அம்சங்களை, அதற்கேற்ற வரிசையில் ஏற்று வாழ்வதிலேயே குருத்துவ உருவம் நிறைவேறும். யேசுவின் சீடத்துவத்தை வாழ்வில் பிரதிபலிக்க தவறுபவர், அல்லது ஆண்டவருடைய வார்த்தையைப் போதிக்க ஆர்வமில்லாதவர், அல்லது திருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்தின் தலைவனாக செயற்பட நல்லாயன் பண்பில்லாதவர், எத்தனை பலிவிருந்துகளை எவ்வித கவர்ச்சியுடன் நிறைவேற்றினும் கிறிஸ்துவின் குருத்துவத்தை நிறைவேற்றமாட்டார். அவர் கிறிஸதவ பூசாரியாக (Cultic – Priests) மாத்திரம் செயற்படுகின்றாரே தவிர கிறிஸ்துவின் உண்மைக் குருத்துவத்தில் பங்கெடுப்பவர் அல்லர்.

கிறிஸ்தவ குருத்தவத்தைப் புரிந்து கொள்வதற்கு, தமிழ்மொழியில் 'குரு'' என்ற வார்த்தைக்கு கொடுக்க படும பொருள் போதாது. குரு என்றவுடன் பலி செலுத்துபவர் என்று கருதப்ப வதினால, கிறிஸ்துவ குரு என்றவுடனும் கிறிஸ்தவ பலி செலுத்துகின்றவரென்று கருதபபடுகின்றது. இது தவறு.

கிறிஸ்தவ குருததுவம் உலக மதஙகளிலே தோன்றியிருக்கும எல்லாக் குருத்துவஙகளுக்கும் முற்றுப்புள்ளி போட்டது, அவைகளிலும பார்க்க அடிப்படையாக வேறுபட்டது கிறிஸ்தவ குரு பழைய கருத்தில பலி செலுத்துபவரல்ல. அவர் கிறிஸ்தவின் பலியையே, மீளவும் திருவருட்சாதனவடிவில் நிறைவேற்றுகின்றவர். அவருடைய குருத்துவம் இத்திருச்சடங்கு நிறைவேற்றுவதில்மாத்திரம் முழுமையாக அடங்குவதல்ல, மாறாக அக்குருத்துவத்தின இறுதி முகபாவமாக (Fin l Expression) அமைகின்றது ஆகையினால் கிறிஸ்தவ குருத்துவத்தை விளஙகுவதிலும் உருவாக்குவதிலும், வாழ்விலும ஓர் புரட்சி ஏறபடவேண்டும. குருக்கள் தங்களை கிறிஸ்துவின் உண்மைச்சீடராக நிருபிக்க வேண்டும் தங்கள் வார்த்தையிலும் வாழ்விலும் இறைவார்த்தை ஊறியிருப்பதை காணபிக்கவேண்டும, தஙகள தலைமைத்துவத்தில் நல்லாயனுக்குரிய பண்புகள் பிரதி பலிக்கவேண்டும். அப்போதுதான் அவர்கள் தலைமை வாக்கும் பலியான நற்கருணை எமது திருச்சபையின் ஊற்றாகவும உச்சியாகவும் இருக்கும்.

---

''நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள். பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் அவர்களுக்கு ஞானஸ்தானம் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட அனைத்தையும் அவர்கள் கடைப்பிடிக்கும்படி போதியுஙகள்.'' (மத் 28: 19, 20)

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபைச் சட்டத்தின் நோக்கில் திருப்பணியாளரின் ஞானவாழ்வு உருவாக்கம்

அருள்திரு இராயப்பு யோசவ்

## முன்னுரை

அன்னையும், ஆசிரியையும் ஆகிய திருச்சபை இரண்டாயிரம் ஆண்டளவாய் திருப்பணியாளரை உருவாக்க தன்னை அயராது ஈடு படுத்தியுள்ளது. இதன் வழியாய் ஞானததிலும், அநுபவத்திலும் முதிர்ந்து, இன்றைய உலகில் பணிசெய்யும் திருப்பணியாளர்களை உரு வாக்குதல் பற்றி தனது புதிய சட்டக் கோர்வையிலே சிறப்புற குறிப் பிடுகின்றது.

## பயிற்சியின் நோக்கு

யேசு ஆண்டவர் தன் சீடர்களை உருவாக்கியது போன்று, இறை திருப்பணியாளர்களை உருவாக்கும் தனது உரிமையையும், கடமையையும், திருச்சபை வற்புறுத்தி, இந்த பணியிலே, ஆயர்கள், குருக்கள், ஆசிரியர் களையும், திருப்பணியாளர்களின் முதன் விளைநிலங்களாக இருக்கும் குடும்பங்கள், பங்குத்தளங்களையும், காம் கொடுத்து உதவக் கோரி நிற்கின்றது குருத்துவக் கல்லூரியில் இப்பணி முழு உருவம் பெறுகின் றது, எனக் குறிப்பிட்டு, இந்த உருவாக்கம் நல்ல நோக்குடன், நிரந் தரமாக திருப்பணிக்கு தன்னை அர்ப்பணிக்க முன்வரும் ஒருவரை முதிர்ச்சியுடைய ஒரு கிறிஸ்தவ மனிதனாக்குவதையே நோக்காக கொண் டுளளதென சுட்டிக்காட்டுகின்றது

## நாளாந்த வழிமுறைகள்

இந்த நோக்கத்தை அடைந்து கொள்ள பல வழிமுறைகளை முன் வைத்து, மனித நேயத்திலும், கிறிஸ்துவின் அன்பிலும், நற்செய்தி யின் உயர்ந்த நோக்கத்துடன் ஆழமாக வேரூன்ற பாதை காட்டுகின்றது. குருத்துவக் கல்லூரி வாழ்வின் மையமாகத் திகழும் நற்கருணை பலி விருந்தில் தினமும் பங்கெடுத்து கிறிஸ்துவின் பலிவாழ்வை தொடர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமையையும், ஒப்பற்ற செல்வமிகு இவ் ஊற்றிலிருந்து ஆவிக்குரிய ஞானவாழ்வின் வழங்களையும் முகந்து கொள்ள வலியுறுத்துகின்றது. செபமனப் பான்மையில் ஆழமாகி தம் திருஅழைத்தலில் வேரூன்ற, திருச்சபைக்காகவும், முழு உலகத்துக்காகவும். பரிந்துரைக்கும் திருச்சபையின் கட்டளைச் செபத்தில் ஆர்வமுடன் பயிற்சி பெற்று மூவ்வேளையிலும் இறைவனுடன் உரையாடவும், அன்றாட தியான செபம் வழியாய் அவருடன் உறவாடவும், மரியன்னையின் பக்தியில் சிறப்பு வளர்ச்சியடையவும் அழைப்புக் கொடுக்கின்றது. தமாகவே ஒரு ஞானவழி காட்டியை தெரிவு செய்து அவரை நம்பிக்கைக்குரிய நண்பன் எனக் கொண்டு அவர்முன் திறந்த ஒரு புத்தகம் போல் ஒளிவு மறைவின்றி தம்மை வெளிப்படுத்தி வளர்ச்சியின் பாதையில் முன்னேற பரிந்துரைக்கின்றது.

## ஆவியின் ஏவுதல்

பரிசுத்த ஆவியால் இயக்கப்பட்டு வாழ்கின்ற வாழ்வை நோக்கியே கிறிஸ்து தம் சீடர்களை உருவாக்கினார். ஊன் உடலுக்குரிய செயல்களில் இருந்து அவர்களைப் படிப்படியாய் விடுவித்தார். இவ்வுலகின் வெற்றிச் சின்னங்களை வணங்கி, மனித விருப்புக்கள், வெறுப்புக்களால் வழிநடாத்தப்பட்டு ஒரு மனிதனாக மட்டுமே வாழும் வாழ்வுக்கு அப்பால் அவர்களை இட்டுச் சென்றார். பரிசுத்த ஆவிக்குப் பணிந்து வாழும் இவ்வாழ்வு என்பது என்ன என்று யேசுவின் வாழ்வைக் கண்ட சீடர்கள் கற்றுக் கொண்டனர்.

பரிசுத்த ஆவிக்குத் தங்களைத் திறந்து கொடுப்பதே இந்த உருவாக்கத்தின் முதல் நோக்காகும். எனவே குருத்துவக் கல்லூரியில் இடம் பெறவேண்டிய மெய் இயல், இறை இயல்உருவாக்கம்; உடல், உள, ஒழுக்க உருவாக்கம்: சமூக, மறைபணி உருவாக்கம் இவை அனைத்துமே உருவாக்கத்திற்கு அத்திவாரமாய் அமைகின்றன என திருச்சபைச் சட்டம் வலியுறுத்துகின்றது. பரிசுத்த ஆவிக்கு நிபந்தனை இன்றி முழுமையாக தன்னை அர்பணிக்க ஊக்குவிக்கும் இவ்வுருவாக்கமே யேசுவைப் பற்றிய உண்மை அறிவின் நிறைவிற்கு திருப்பணியாளர்களை இட்டுச் சென்று யேசுவின் சாட்சிகளாக அவர்களைத் திருச்சபைக்கு கொடுக்க வல்லது என திருச்சபைச் சட்டம் ஐயம் திரிபுற கற்பிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருத்துவத்தின் பரிணாம வளர்ச்சி

சகோ. அருள் யாவிஸ்
(இறையியல் 3ம் ஆண்டு)

## 1) அன்று அப்போஸ்தலரும் குருத்துவமும்

கிறிஸ்துவின் மனிதவதாரம் அதனூடாக அவர் கொண்டு வந்த நற்செய்தி அவரது பாடுகள், மரணம், உத்தானத்தோடு முற்றுப்புள்ளியாகி விடவில்லை. அவரது போதனைகள், அவர் கற்பித்த விழுமியங்கள் இன்றும் எம்மோடு வாழுகிறது அன்றேல் எம்மை வாழ அழைகின்றது. அவர் விசேடமாக ஆயத்தம் செய்த வழித் தோன்றல்களாகிய அப்போஸ்தலர்களினூடாக கிறிஸ்துவின் விழுமியங்கள் உலகமெங்கும் சென்றது. இந்த அப்போஸ்தலபணி கிறிஸ்துவின் மிக முக்கிய பணியாகிய இர்க்கதர்சிசன குருத்துவ மேய்ப்புப் பணிகளை மையமாக கொண்டே வளர்ந்தது.

கிறிஸ்துவின் நேரடி அழைப்பை பெற்ற அப்போஸ்தலர்களின் வாழ்வு நிறைவெய்தும் போது அவர்களது பணிகளை தொடர்ந்தாற்று வதற்கு அவர்களது வழித் தோன்றல்கள் நியமிக்கப்பட வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு அவர்கள் ஆளானார்கள். அதைத்தான் புனித சின்னப்பர் தீமோத்தேயுக்கு எழுதிய கடிதத்தில், (2தீமோ 4:5 – 6) துன்பத்தை ஏற்றுக் கொள்ளும், நற்செய்தித் தொண்டனுக்குரிய வேலையைச் செய்யும், உம் திருப்பணியை செவ்வனே செய்யும், எனக்கோ பிரிய வேண்டிய நேரம் வந்துவிட்டது, இவ்வாறு கூறுகின்றார்.

அவர்களது (அப்போஸ்தலர்களின்) வழித்தோன்றல்களாக உருவான வர்கள் இரண்டு விதமான பணிகளை ஆற்ற வேண்டி இருந்தது. முதலாவதாக தலத் திருச்சபைகளைக் கவனிப்பது, பராமரித்து தேவை களைப் பூர்த்தி செய்வது.

இரண்டாவதாக புதிய திருச்சபைகளை உருவாக்கி, புதிய விசுவாசி களை நற்செய்தியின் ஒளியிலே நடப்படுத்துவது ஆகவே இந்த பணி களை அவர்கள் எவ்வாறு செய்தார்கள்? அவர்களது பணிமுறை எவ் வாறு அமைந்தது என்பதை (நமது பிரச்சனை) நாம் சற்று ஆராய் வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. திருச்சபை அமைப்பிற்கு யூதப் பின்னணி

யூதர்களின் செபக் கூடங்களில் உள்ள மரபு முறையைப் பின்பற்றி சின்னப்பர் தனது புதிய திருச்சபைகளுக்கு பணியாளர்களை நியமித்தார் அனுபவத்திலும், கிறிஸ்தவ உண்மையை போதிப்பதிலும் முதிர்ந்தவர்களை சபைகளின் வழிகாட்டிகளாக நியமித்தார். அந்திருச்சபைகளுக்கு அவர்களே பொறுப்பாகவிருந்து விசுவாசிகளை வழி நடத்தினர்கள். இந்த வழிகாட்டிளில், இறைவாக்கினர்கள், மேய்ப்பர்கள், ஆசிரியர்கள் போன்றோர் அடங்குவார்கள். "ரபிஸ்" (Rabbis) எனப்படும் யூதக் குருக்கள் எவ்வாறு யூதச் செபக் கூடங்களிலிருந்து மக்களை வழிநடத்தினார்களோ அவ்வாறு இவர்களும் நற்செய்திக்கு சான்று பகிர்ந்து மக்களை வழிநடத்தினார்கள். ஜெருசலேம் திருச்சபைக்கு யாகப்பர் தலைவராக இருந்தது போல ஒவ்வொரு திருச்சபைகளும் ஒரு தலைவரைக் கொண்டிருந்தது.

## 3. நூற்றாண்டுகளில் வளர்ந்த பணிகள்

முதல் நூற்றாண்டிலே அப்போஸ்தலர்களின் பணி பலவிதமான புதிய பணிகளோடு விதம் விதமான பணியாளர்களினால் ஆற்றப்பட்டது. அதிலே நாம் அப்போஸ்தலர்கள், இறைவாக்கினர்கள், ஆசிரியர்கள் நற்செய்திபாளர்கள், உடன் உழைப்பாளிகள், உதவியாளர்கள், பந்தி பரிமாறுவோர் இவ்வாறாக பல விதமான கிறிஸ்தவ பணியாட்களை முதல் நூற்றாண்டிலே நாம் காணுகின்றோம்.

அப்போஸ்தலர்கள், இறைவாக்கினர்கள், ஆசிரியர்கள் ஆகிய பணிகள் முதல் நூற்றாண்டுடன் அருகிப்போக இரண்டாம் நூற்றாண்டிலே இவையனைத்தும் மூன்று முக்கிய பணிகளாக உருமாறியது.

இரண்டாம் நூற்றாண்டிலே ஆயர், குருக்கள் தியாக்கோன்மார் என்ற முப்பணிகளே திருச்சபையின் முக்கிய பணியாக அமைந்தது. இதிலே ஆயரின் பணியே முதன்மையானதும் பூரண அதிகாரமுள்ளதுமாக அமைவதை நாம் காணுகின்றோம்

## 4. ஆயரின் தனித்துவம்

ஆயர் தனது உதவியாளர்கள் குருக்கள், தியாக்கோன்மார் அடங்கிய ஒரு குழுசார்ந்த ரீதியாகவே தனது மறைப்பணியை ஆற்றுவது அவரது கடமையாக மாறியது இந்தக் குழுமம், படிப்படியாக வளர்ந்து வந்த பலவிதப்பட்ட திருப்பணிகளின் உச்சக் கட்டமாக விளங்குவதோடு இநத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுமம் மற்றைய மக்கள் குழுக்களை விட வித்தியாசமானதொன்றாக வளர்ச்சி பெறவும் ஆரம்பித்தது. இந்த குழுமத்தின் தலைவரான ஆயர் தனது பணியை தாழ்ச்சியோடும், இறை அன்போடும், இறைபணியாளனாக கடமையாற்ற அழைக்கப்பட்டார். தனது சொந்த அதிகாரத்தில் வழி நடத்துவதல்ல மாறாக கிறிஸ்துவாகிய நல்லாயனின் வழி நடத்துதலின் கீழ் திருச்சபையை வழிநடத்துதலே இவரது கடமையாகவிருந்தது. (1 இரா 2:25). ஆகவே அவர் இறைவார்த்தைக்கு தன்னை இசைந்து கொடுத்து கடவுளின் திருச்சபையை வழிநடத்த அழைக்கப்பட்டார் (1 இரா 5:4). ஆயர் பணியே ஒவ்வொரு திருச்சபைகளினதும் முதன்மையானதும் ஒருமைத்தன்மை வாய்ந்ததுமாக வளர்ச்சி பெற்றது. இந்த ஆயர் பணியே அப்போஸ்தலர்களின் பணியின் நேரடி மரபுவழி வந்ததாக மதிக்கப்படுகின்றது.

நாலாம் நூற்றாண்டில் உருவான மிலான் இராஜசாசனம் (313) திருச்சபை அதிகாரங்களிலே குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியது. திருச்சபை அரசவுரிமை பெற்று அரச அதிகாரிகளால் உத்தியோக பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. கத்தோலிக்க சமயம் அரச மதமாக மாறியது. இதனால் பல சலுகைகள் திருச்சபையை வந்து சேர்ந்தன. விளைவு திருச்சபையின் அதிகாரங்களும், அமைப்பு முறைகளும், உலகைச் சார்ந்த போக்கிலே வளர ஆரம்பித்து. இதனால் புனிதத்தையும் இறை வெளிப்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டு வளர வேண்டிய திருச்சபை ஒருவகையில் உலக விழுமியங்களில் செல்வாக்கு செலுத்த தன்னை ஓரளவு விட்டுக் கொடுக்க ஆரம்பித்தது.

இந்த தாக்கம் திருச்சபையின் அமைப்பு முறையில் சில மாற்றங்களை உண்டு பண்ணியது. ஆயரை மையமாகக் கொண்டு சில புதிய பணிகள் உருவாகின.

4ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் 5ம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியிலுமே இம்மாற்றங்கள் உருவானது. ஆயருக்கு மேலாக பேராயர், கருதினால், மறை முதுவர் போன்றோரும், ஆயருக்கும் குருக்களுக்கும், தியாக்கோனுக்கும் கீழாக உப தியாக்கோன், பீடப்பணியாளர், வாசகர், வேடபாளர் என்ற பணிகள் திருச்சபையிலே காணப்பட்டன.

## 5ம் மாறாத தொடர்ச்சி

5ம் நூற்றண்டில் உருவான திருச்சபை அமைப்பு முறை ஏறத்தாழ பத்து நூற்றண்டுகளாக, தன்னுள்ளே பெரிய மாற்றங்களை ஏற்படுத்தவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும் 14 - ம் நூற்றண்டு முதல் 20ம் நூற்றண்டு வரையிலான காலப்பகுதியில் ''திருச்சபை'' அமைப்பையும் அதிகாரத்தையும் பின்னணியாக கொண்டு செயல்பட ஆரம்பித்தது. ஆயர்கள் நிலப் பிரபுக்களாகவும் அதிக சொத்துக்களுக்கு பொறுப்பானவர்களாகவும் அரண்மனையில் பல வசதிகளோடு மக்களால் இலகுவில் அணுக முடியாதவர்களாக வாழ ஆரம்பித்தார்கள். குருவானவர், திருவருட்சாதனங்களை வழங்குபவராகவும், பணித்தளங்களின் தலைவராகவும் மாறினார். இவர்கள் சடங்கு செய்பவர்களாக (Cultic ministers) மாறினர்: இந்தக் காலத்தில்தான் திருத் தொண்டர்பணி lay ministries அற்றுப் போனதையும், குருத்துவத்தை அடைவதற்கான ஒரு படியாக மாறியதையும் காண்கின்றோம்.

இப்படியான உலகச்சார்ந்து சென்ற தன்மைகளினால், 14ம் நூற்றண்டில் திருச்சபையில் மறுமலர்ச்சி (Reformation) வெடித்தது. அந்த மறுமலர்ச்சியின் எதிர்ப்பு வாதங்கள், திருச்சபையின் அதிகாரங்களையும் அதிகாரத் தன்மையையும் மேலும் மேலும் வலுப்படுத்துவதாகவே அமைந்தது. திருச்சபை மக்கள் மீது, அதிகாரம் கொண்டு ஆட்சி செலுத்தும் அமைப்பானது. திருச்சபைச் சட்டங்கள் மக்கள் வாழ்க்கையில் முதலிடம் பெற்றது. ஆகவே, இக்காலத்தில் திருச்சபையின் பணி, தற்பாதுகாப்புப் பணியாகவே அமைந்ததே தவிர கிறிஸ்துவின் விழுமியங்கள், திருச்சபையின் பணியில் அருகிப் போனதை நாம் காணுவதில்லை.

## 6. 2ம் வத். சங்கம்

இந்தப் பின்னணியிலேயே இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் ஒன்று கூடியது. மறுமலர்ச்சியின் பாதிப்பு திருச்சபையின் குருத்துவ அமைப்பிலே மாற்றத்தை உண்டு பண்ணா விட்டாலும், அதன் இறையியல் குருத்துவத்தின் தன்மையில் பெரும் மாற்றத்தை உண்டு பண்ணக் காரணியாக அமைந்தது.

திருச்சபையின் பணி நவீன மயமாவதையும் பணியின் அணுகு முறையில் புதுமை புகுவதையும் நாம் அனுபவிக்கின்றோம்.

இச் சங்கம் திருச்சபையை அதிகாரம் கொண்ட ஒரு அமைப்பு முறையிலிருந்து திருச்சபையை ஆவிநிறை சமூகமாக மாற்றியது.

இக் கண்ணோட்டத்தில் தற்போதைய உருவமாற்றம் குருத்துவத்தில் நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறை மாவட்டக் குருக்களின் ஞான நெறி

தவத்திரு. லோ. வ. இராயப்பு மா. ம. தி.

ஞான நெறி என்றால் தூய ஆவியானவரின் ஆதிக்கத்தின் கீழ் தன்னைப் புனிதப்படுத்த ஒருவர் ஏற்றுக் கொள்ளும் ஒரு வாழ்க்கை முறை. அதாவது தூய ஆவியானவரின் ஏவுதலால் தூண்டப்பட்டு ஒருவர் நற்செய்திப் போதனைகளை ஏற்று அவற்றிற்கேற்ப தன் வாழ்வை புனிதமாகவும் பூரணமாகவும் வாழப் பயன்படுத்தும் ஒரு நெறியே ஞான நெறி.

அப்படி யென்றால் ஒரே விசுவாசத்தையும், ஒரே திருமுழுக்கையும் ஏற்றுக் கொண்ட கிறிஸ்தவர் அனைவருக்கும் ஒரே வாழ்க்கை நெறி, ஒரே ஞான நெறியல்லவா உண்டு. எப்படித் மறைமாவட்டக் குருக்களின் ஞானநெறி பற்றிப் பேசலாம்? அது ஏனைய கிறிஸ்தவர்களுடைய ஞான நெறிக்கு வேறுபட்டதா?

நாம் அனைவரும் புனிதத்துவத்தை அடைய, நம் இரட்சணியத்துக்குத் தேவையான அருட்சாதனங்களை ஏற்று வாழ வேண்டுமென்பது உண்மைதான். ஆனால் வெவ்வேறு மக்கள் வெவ்வேறு விதமாகப பக்தியை அநுசரிக்கிறார்கள. வெவ்வேறு புண்ணியங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறார்கள் இக் கருத்தில் தான் வெவ்வேறு ஞான நெறிகள் பற்றிப் போசலாம்.

ஞானாசிரியரின் கருத்துப்படி எந்த ஒரு ஞான நெறியும் பின்வருவனவற்றில் அடங்கும்:—

1. தூய ஆவியானவரால் ஏவப்பட்டு முக்கியத்துவம் அளிக்கும் ஒரு மத கோட்பாட்டை ஆழமாக வாழ்தல்.

2. தங்களுக்குத் தனித்துவம் அளிப்பதாகக் கருதப்படும் ஒரு குறிக்கப்பட்ட கோட்பாட்டோடு தங்கள், வாழ்க்கை முழுதும் ஒன்றிணைய முயற்சித்தல்.

3. நடைமுறையில் தங்கள் ஞான நெறிக் கேற்ப வாழ்வின் எல்லா நிகழ்ச்சிகளையும் தழுவி அமைத்து சொந்த அழைத்தலுக்கு அடிக்கடி இட்டுச் செல்லுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஒரேவிதமான அழைப்பினால் ஒன்று சேர்க்கப்பட்டவர்கள் தங்கள் முயற்சியில் ஒருவரொருவருக்கு உறுதுணையாயிருப்பதற்குக் கூட்டாக ஒத்துழைத்தல்.

மறைமாவட்டக் குருக்களைப் பொறுத்தமட்டில் அவர்களது ஞான நெறி பணி செய்வதை மையமாகக் கொண்ட ஞான நெறியாக அமைய வேண்டும். அதாவது மறைமாவட்டக் குருக்கள் தங்கள் மறைபணியின் கடமைகள் மூலம் தங்களைப் புனிதப்படுத்த வேண்டும். தாங்கள் மறைபணியைச் செய்து முடிக்க வேண்டிய ஒரு கடமையாக மட்டும் கருதாது அது மக்கள் மட்டில தாங்கள், கொண்டிருக்கும் அன்பின் அவதாரமாகித் தங்களைப் புனிதப்படுத்தவும் பூரணப்படுத்தவும் ஏற்ற வழிவகையாவும் ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவே ஒரு உத்தம புனித மறைமாவட்டக் குருவை அவர் தன் பணியை ஆற்றும் விதத்திலிருந்து கண்டு கொள்ளலாம்.

இத்தகைய குருவரொருவர் தனது பணியை நிறைவேற்றுகையில் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களுக்குச் சேவையாற்றுவதே தன்குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும். செயலளவில் ஒரு துறவற குருவின் குறிக்கோளும் இதுவே ஆனால் இருவரதும் நோக்கங்கள் வேறுபட்டவை. வெவ்வேறு அமைப்பின் கீழ் இருதரப்புக் குருக்களும் பணிபுரிகின்றனர் உதாரணமாக துறவறக் குரவர் ஒருவர் திருப்பலி ஒப்புக் கொடுக்கும் பொழுது அதை முக்கியமாகத்தன் சபை ஒழுங்குக்கு அமையும் ஒரு செயலாகவே நிறைவேற்றுகிறார், ஏனெனில துறவிகளின ஒழுஙகுகளின் படி அவர்கள் நாளாந்தம் திருப்பலி ஒப்புக்கொடுக்கக் கடமைப்பட்டுள்ளனர். மாறாக மறை மாவட்டக் குரு திருப்பலி ஒப்புக் கொடுக்கும் போது அதை முதல் முதல் ஒரு பங்கிலே செய்ய வேண்டிய சேவையாகவே நிறைவேற்றுகிறார் துறவிகளுடைய கீழ்ப்படிதலுக்கும், மறைமாவட்டக் குருக்களின் கீழ்படிதலுக்கும் வேறுபாடுண்டு. துறவிகளின் கீழ்படிதல் அவர்களைச் சுய மறுப்பில் பயிற்றுகிறது. மாறாக திருநிலைப்படுத்தப்பட்ட அன்று மறை மாவட்டக் குரு தன் ஆயருக்குக் கீழ் படிவதாகக் கொடுத்த வாக்குறுதி, மக்களுக்கு ஆற்றும சேவையையும் மறைமாவட்டத்தின் ஒருமைப் பாட்டையும் குறிக் கோளாகக் கொண்டது.

எனவே மறைமாவட்டக் குருவினதும் துறவற குருவினதும் பணிகளின் அமைப்புருவம், வேறுபட்டது. துறவற குருவுக்கு அவரது பணி ஒரு தவச் செயலாகவும் விடுதலையாகவும் அமைகிறது. மாறாக மறைமாவட்ட குருவுக்கு அது ஒரு அப்போஸ்தல அன்புச் சேவையாக அமைவதை காண்கிறோம். இநத அபபோஸ்தல ஆர்வமும், அன்பும், சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பான்மையுமே ஒரு மறைமாவட்டக்குரு தனது புனிதத்துவத்தையும் மறைப்பணி நற்பண்புகளையும் அடையத்துணை செய்ய வேண்டும்.

மறைமாவட்டக் குருக்களின் ஞானநெறி பற்றிய மேற் கூறப்பட்ட சிந்தனைகள் இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் ''குருத்துவப் பயிற்சி'' ''குருக்களின் பணியும் வாழ்வும்'' என்ற இரண்டு தீர்மானத் தொகுப்புகளில் மிகவும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. உதாரணமாக ''குருக்களின் பணியும் வாழ்வும்'' என்னும் தீர்மானத் தொகுப்பில பின்வரும் வார்த்தைகளைக் காணுகிறோம். இவை மறைமாவட்டக் குருக்களையே குறிக்கின்றன ''தங்களின் அழைத்தலாலும் குருப்பட்டத்தாலும் புதிய ஏற்பாட்டின் குருக்கள் ஒரு விதத்தில் இறை மக்களுக்குள்ளேயே பிரித்தெடுக்கப்படுகிறார்கள் எனினும் இது அவர்கள் இறை மக்களிடமிருந்தோ வேறு எந்த மனிதர்களிமிருந்தோ பிரிக்கப்பட வேண்டும் என்பதற்காக அல்ல. மாறாக, ஆண்டவர் அவர்களை எதற்காக அழைத்தாரோ, அந்தப் பணிக்கு தங்களை முழுவதும் அர்ப்பணம் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான்.. ... அதே வேளையில் அவர்கள் மக்கள் நடுவில் வாழ வேண்டியவர்களாகவும் தங்கள் ஆடுகளை அறியும் நல்ல மேய்ப்பர்களாகவும்...... இருக்க வேண்டுமென அவர்களது பணி கோருகிறது'' (எண். 3)

மேலும் 'குருத்துவப்பயிற்சி' என்னும் தீர்மானத் தொகுப்பில் ''நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவைப் போல மக்களின் உண்மையான மேய்ப்பர்களாகக் (குரு) மாணவர்கள் உருவாக்கப்படுவதற்கு ஏற்றவிதமாக அவர்களது பயிற்சி முழுவதும் அமைய வேண்டும்.... பணிவிடை பெறுவதற்கன்று பணிவிடைபுரியவும், பலர் மீட்புக்கு ஈடாகத் தம் உயிரையும் அளிக்க வந்த(மாற்கு 10 : 45) கிறிஸ்துவை மக்களுக்குக் காட்டக் கற்றுக் கொள்ளவும், மக்கள் அனைவரின் ஊழியராக மாறிப், பலரை இறையன்பால் ஈர்க்கவும் குருமாணவர்களை மேய்ப்புப் பணிக்குத் தயாரிக்க வேண்டும்... எல்லாப் பயிற்சித்திட்டங்களிலும் இந்த மேய்ப்புப்பணியையே நோக்காகக்கொண்டு ஒருமித்த செயலாக அமைய வேண்டும்'' (எண் 4). ''குருத்துவக் கடமைகளை நிறைவேற்றவும் மேய்ப்பு அலுவல்களைச் செய்யவும வேண்டிய ஆற்றல (குரு) மாணவர்களிடம் இருக்கிறதா? என்றும் தீர்மானிக்க வேண்டும்'' (எண 6). எனவும் மறை மாவட்டக் குருக்களின் ஞானநெறி பற்றிக் கூறப்பட்டுள்ளது.

கிறிஸ்துவின் ''உடன் உழைப்பாழி''யாகிய குருவின் ஞானநெறி, குரு தனது மேய்ப்புப் பணியில கிறிஸ்துவை மேல் வரிச் சட்டமாகக் கொள்ள வேண்டுமென்பதை எதிர்பார்க்கிறது. கிறிஸ்துவை அனைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களும் அணுகமுடிந்த தென்பதை எவரும் மறக்க முடியாது. ஏழைகள், செல்வந்தர், நோயாளிகள், துன்பப்படுவோர் என்ற வேறுபாடின்றி அனைவரும் கிறிஸ்துவை அண்டிச் சென்றனர். அவர் யார் யாருக்குத் தேவைகளிருந்ததோ, அவர்களுக்குத் துணைபுரிவதே தனது சேவை என்று எண்ணிய ஒரு மருத்துவர். தன் மந்தைகளுக்காகத் தன்னுயிரைத் தியாகம் செய்த நல்லாயன். இந்த நல்லாயன் கிறிஸ்துவைப் பின்பற்றியே மறைமாவட்டக் குருக்களும் தங்கள் மறை பணியை அனைவருக்கும் பாரபட்சமின்றி ஆற்ற ஆயத்தமாக இருக்க வேண்டும். தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களுக்குப் பணி புரிய எவ்வித தியாகமும் செய்ய முன்வரவேண்டும்.

எனவே மறைமாவட்டக் குருக்களின் ஞான நெறியை நல்லாயனின் ஞானநெறி எனக் கூறலாம். நல்ல ஒரு ஆயன் என்றால் யார்? தனது மந்தைகளை நன்கறிந்து, அவைகளுக்கு வழிகாட்டி, அவைகள் போகும் வழியில் தானும் சேர்ந்து போகின்றவனே. மறைமாவட்டக் குருக்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களுக்கு நல்லாயனாக அமைய வேண்டுமாகில் மக்கள் மத்தியில் அவர்கள் பிரசன்னமாயிருப்பது அவசியம். பிரசன்னமாயிருத்தலென்றால் மக்களோடு ஒன்றாகி தங்களிடமுள்ள அனைத்தையும், அதாவது தங்கள் ஆற்றல், திறமை, நேரம் ஏன் வாழ்க்கை முழுவதையுமே, மக்களுடன் பகிர்ந்து கொள்ளல், அத்துடன் அவர்களில் உண்மையான அன்பும் அக்கறையும் கொள்ளுதல், அவர்களது குறை நிறைகளோடு அவர்களை ஏற்றுக்கொண்டு தவறுகள் செய்யும்போது அவர்களைத் திருத்தி அவர்களை வழிநடத்துதல்.

செயல்புரிதல் அல்லது பணி செய்தல்தான் மறை மாவட்டக் குருக்களின் ஞானநெறி என்பதை நாம் ஏற்றுக்கொண்டபின் பணிகளுள் சிறந்த பணியாகக் கருதப்படும் அப்போஸ்தல பணி, குருக்கள் இறைவனுடன் இணைந்து அவர்களை அன்புச் செயல்களுக்கும் தம்மைப் புனிதப்படுத்தவும் அது எப்படி இட்டுச்செல்லக் கூடுமென்பதையும் நாம் ஆராய வேண்டும். மறைமாவட்டக் குருக்களின் ஞான நெறிபற்றிப் போதிய ஆராய்ச்சி செய்யப்படவில்லை என்பதும் விளக்கம் அளிக்கப்படவில்லை என்பதும் பல ஞானாசிரியரின் கருத்து. ஆனாலொன்று இத்தகைய குருக்களின் ஞானநெறியாகிய செயல்படுதல், பணி புரிதலுக்கும் பற்பல செயல்களில் ஈடுபடுதலுக்குமிடையில் (activism) பாரதூரமான வேறுபாடுண்டு என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளுகின்றனர். ஒரு சில குருக்கள் நாள் முழுதும் ஓடித்திருந்து பலவற்றை சாதித்து விட்ட திருப்தியை அடைவதற்காகப் பற்பல வேலைகளில் ஈடுபடுகிறார்கள். செபிக்க நேரமின்றி, நேரத்தோடு உணவருந்தவும் முடியாமல் நாள் முழுவதும் இங்குமங்கும் அலைந்து திரிந்து பற்பல செயல்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடும் ஒரு குருவை ஒரு ஆர்வமுள்ள குருவென்று யாராவது எண்ணு வார்களா? உண்மையில் ஆர்வமுள்ள, அப்போஸ்தல பணி புரியும் ஒரு குருவை அவர் எந்த நோக்கத்துடன் செயல்படுகிறாரென்பதிலிருந்து தான் கணிக்கலாம் அவரின் செயல்பாடுகள் அவரைப் புனிதப்படுத்தத் துணைபுரிய வேண்டும். அதே நேரத்தில் அவரின் செயல்கள் அவருக்கும் இறைவனுக்குமிடையில் உள்ள உறவின் கனிகளாக அமைய வேண்டும். அவை பங்கு மக்களை உத்தம கிறிஸ்தவர்களாக்க உதவ வேண்டும். அவர்களை இறைவனண்டை கொண்டுவரத் துணை செய்யும் செயல்களாய் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் இத்தகைய செயல்படுதல் குருக்களின் ஞானநெறியோடு சம்பந்தப்பட்ட செயல்படுதலாக அமையும்.

இந்தக் கருத்தில் நாம் மறைமாவட்டக் குருக்களின் ஞான நெறியைப் புரிந்துகொண்டோமாகில், அதாவது அது நல்லாயனின் ஞான நெறி, அப்போஸ்தல பணியின் ஞான நெறி, சேவையின் ஞானநெறி என்பதை விளங்கிக்கொண்டோமாகில், நம் ஒவ்வொரு செயலையும், ஒரு செபமாக மாற்றியமைக்கலாம். இந்தக் கருத்தில் தான் புனித சின்னப்பரும்: ''உண்டாலென்ன, குடித்தாலென்ன, எதைச் செய்தாலும் அனைத்தையும் கடவுளுடைய மகிமைக்காகச் செய்யுங்கள்'' *(1 கொரி- 10 : 31)* எனக் கூறுகிறார். இறைவனின் மகிமைக்காக நாம் ஒரு செயலைச் செய்யும்போது அவரது திருவுளத்துக்கு ஏற்ப செயல்படுகிறோம். அதன் விளைவாக நாம் புனிதத்துவத்தையும் அடைய முயற்சிக்கிறோம்.

---

❊ குருத்துவம் வழியே குருக்கள் தூய ஆவியின் பூசுதலால் ஒரு தனிப்பட்டதொரு முத்திரை கொண்டு குறிக்கப்படுகிறார்கள்; இவ்வாறு தலையாகிய கிறிஸ்துவின் பெயரால் செயல்படும்படி அவர்கள் குருவாகிய கிறிஸ்துவின் சாயலைப் பெறுகிறார்கள்.

*(2 - ம் வத், கு; எண் 2)*

❊ குருக்கள் இறையரசை முன்னிட்டு நிறைவான, நிலையான தன்னடக்கத்தைக் கொண்டிருக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

*(திருச்சபைச் சட்டம் எண் 277)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது நிலையினருக்கான இறையியல் கல்வி ஆரம்பம்

தமிழ் மொழியில் பொது நிலையினருக்கான இறையியல் கற்கை நெறி யாழ் மறை மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

''பொது நிலையினர் இன்றைய உலகத்தை நன்கு அறிந்தவராய் தம் சொந்த சமுதாயத்திலும், பண்பாட்டிலும் ஊன்றிய உறுப்பினராய் இருக்க வேண்டும்'' (பொ ம. 29) என அறைகூவல் விடுக்கும் இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் சவாலை ஏற்று, தமது தாய் மொழியில் இறையியலை கற்பது ''திருச்சபைத் தூதுப்பணியில், பொது நிலையினர் தமக்கே உரித்தான முறையில் பங்கு'' (பொ. ம 29) கொள்வதற்கு உதவியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

எமது தமிழ் மக்களின் வாழ்வு, பிரச்சினைகள் இவற்றை இறையியல் மயமாக்கி இறைவார்த்தையின் ஒளியில் இவற்றை அணுக இந்த இறையியல் கற்கைநெறி ஓர் நல்ல சந்தர்ப்பமாகும். அத்துடன் மரபு ரீதியாக பெற்றுக்கொண்ட விசுவாச உண்மைகளை ஆழமாக விளங்குவதற்கும் இது ஓர் சந்தர்ப்பம்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் பொதுநிலையினரால் முன் வைக்கப்பட்ட இந்தக் கோரிக்கைக்கு செயல்வடிவம் கொடுக்கும் முகமாக, யாழ் மறை மாவட்ட பொதுநிலையினர் கழகத்தின் அனுசரணையுடன் இக்கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது

மாதம் இரு முறை வார இறுதி நாட்களில் தொடர்ந்த ஆறு மாதங்களுக்கு. யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெறும்.

இக் கற்கைநெறிக்குப் பொறுப்பாக யாழ். புனித சவேரியார் குருததுவக் கல்லூரி பேராசிரியர்கள் உதவிபுரிவர்

---

*எமது அடுத்த (புரட்டாசி மாத) இதழ் ''திருச்சபை'' எனும் தலைப்பில் வெளிவர இருப்பதால் உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பிவையுங்கள்.*

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*SYNOPSIS*

## LAY EXPECTATIONS OF PRIESTLY FORMATION

*Mr. R. Joseph*

The laity has a definite role to play in the priestly formation. All formation, begins in the family. and priestly formation is no exception. The parish community becomes the second cradle of priestly formation. The personality and the attitudes of the pastor as well as the active operation of fellowship - groups or basic - christian communities in the parishes, are of great help for priestly training.

In selecting candidates for priestly training, the church should identity and select preferably those who are already involved in some lay ministries or apostolates and who show some leadership qualities.

Swami Nallur Gnanapragasar, while doing his scholarly research in Tamil, dedicated himself for ardent missionary work too. Likewise our priests must combine pastoral ministries with specialised studies and research.

The priest is no more a jack of all trades. He must be humble enough to accept his limitations and consult and collaborate with the laity at least in matters pertaining to the world.

Priestly formation, as an on going process, needs fellowship groups of priests to share problems, to pray together and to build up fraternity and solidarity among them. Similarly the priests ought to foster closer relationship with the people and their problems and cultivate good relationship even with those outside our churches with a spirit of openness and optimism

## THE CHRISTIAN PRIESTHOOD

*Rev. Fr. S. J. Emmanuel*

The coming synod is to discuss "Priestly Formation in the Circumstances of Today". This presumes that the Theology of the priesthood itself has been sufficiently studied and clarified. But unfortunately the vision and spirit of Vat. II have not yet been



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

adequately taken into the theology of the priesthood. Although the priest has been acknowledged as the chief agent of all post-Vat. II changes, the documents of Vat. II on the Priesthood and even the synodal document of 1971 on the priesthood have not made suitable and adequate changes along the spirit and vision of Vat. II. Hence the post - Vat. II crisis in the priesthood continues in diverse forms.

A courageous rethinking of the christian priesthood on the basis of the rich biblical insights gained during the last few decades, coupled with the general insights of Vat. II with respect to the understanding of God, church, spirit, world etc,. should be attempted. The socio - political - economical realities have also to be considered as a determining factor for the priesthood.

Hence a return to such elements as discipleship, apostleship, good - shepherd leadership and presidentship of the Eucharist (Fr. Raymond Brown, Priest & Bishop) must be attempted. The formation methods and the living of the priesthood (Spirituality) must pay attention to that order of priorities. The present order of considering all ordained to preside at the Eucharist as being automatically ideal disciples of Christ, official preachers and leaders of communities must be reversed The right order of priority should be towards an intense - discipleship, a zealous apostoleship (of the message) a Good - shepherd leadership and then, and only then, a meaningful presiding at the Eucharist.

## SPIRITUAL FORMATION IN THE CODE

*Rev Fr. R Joseph*

The Church had ever since her beginning been forming clerics and the norms of the code came from her sublime wisdom and the long rich experience. Following the example of Christ, the formator of the first clerics, the Church considers it her duty and right to form those seen capable of dedicating themselves permanently to the sacred ministries, into mature, human, christian and spirit-filled persons. Norms in the New Code on formation of clerics point out ways and means of liberating candidates from being mere men. They show a way of gradually opening oneself to



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

a life of complete and unconditional surrender to the Holy Spirit. This spiritual formation is seen as the summit and source of all other modes of Seminary formation.

## THE EVOLUTION OF PRIESTHOOD

*Bro. Arul Yavis*

With the apostles growing old there arose the problem of their succession. They handed on their ministries to other approved men from among their collaborators

The first century witnesses a variety of ministries, namely, apostles, prophets, teachers, evangelists, co - workers, helpers etc.

Within a short time of almost two centuries, most of these ministries became extinct It was only the episcopate, presbyterate and diaconate that stablized in the church. These triple ministries were dominant for many centuries and acquired different grades above the episcopate (Cardinal Archbishop Metropolitan) and below the diaconate (sub - diaconate, acolyte, lector, exorcist, porter etc ).

These stablized structures lasted until reformation and when challenges were thrown against these ministries, the church defended its position by stressing the hierarchical structure of the church and making the priest the minister of the church for all purposes. The order of diocanate becomes a mere stepping stone for the priesthood.

A new theology of the priesthood is emerging after Vatican II. It is changing the whole structure and idea of ministries in the church so as to situate the priest in his new place.

## THE SPIRITUALITY OF THE SECULAR PRIEST

*Rev. Fr. Rayappu omi*

By spirituality is meant a way of standing before God under the inspiration of the Holy Spirit; a method, a way of living the Gospel, which one adopts to work out one's sanctification. Even though, there is, for all christians one faith and one baptism,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

different people place the emphasis on different virtues, according to the exigencies of their vocation.

The spirituality of the secular priest is the spirituality of action of apostolic action, the spirituality of the Good Shepherd. It is the spirituality of pastoral service, which is an efficacious and ultimate sign of the gift of oneself for the sake of others. The spirituality of the secular priest who is a "co-worker" with Christ demands that he imitate Christ, the Good Shepherd in his pastoral activity

However the spirituality of action is not to be confused with activism, namely an exaggerated indulgence in activities for the sake of feeling that one has accomplished many things.

---

## Theology in Tamil

A course in Theology in Tamil was inaugurated in the diocese of Jaffna by Bishop Deogupillai.

The course would provide a contextual theological formation to the laity and also a framework to view contemporary issues in a new theological perspective.

This venture is an actualization of a wish often expressed by the lay people themselves through the Laity Commission of Jaffna.

While the Laity Commission of the diocese is in charge of planning and running the course, the academic staff of St Francis Xavier's seminary will be responsible for the lectures.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org